


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில், தமிழ்நாட்டில் வனங்கள் மற்றும் மரங்களால் சூழப்பட்டுள்ள பரப்பினை 33 சதவீதமாக மாற்றும் குறிக்கோளினை அடையும் வகையில் 'தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026' வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி - தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் ரூ.7 கோடியில் புதிய கட்டடம் —

# ரூ.10.38 கோடியில் - பணிபுரியும் மகளிருக்கான 2 "தோழி" விடுதிக் கட்டடங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச். 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.03.2026) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், சிவகங்கை மற்றும் தேனி ஆகிய இடங்களில் 10.38 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிருக்கான 2 "தோழி" விடுதிக் கட்டடங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் இதுவரை சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, மதுரை, தருமபுரி, கடலூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 19 மாவட்டங்களில் 23 தோழி விடுதிகள் நிறுவப்பட்டு, 2,100 பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பிற மாவட்டங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, மேலும், 22 புதிய "தோழி" விடுதிகளை 220.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் 2540 மகளிர் தங்குவதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இன்றையதினம் சிவகங்கை மற்றும் தேனி ஆகிய இடங்களில் 10 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 100 மகளிர் தங்கும் வகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 "தோழி" விடுதிக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மகளிரின் பாதுகாப்பான, வசதியான தங்குமிடங்கள் தேவைகளை கருத்தில் கொண்டு, பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாது பயிற்சி, உயர்கல்வி, நேர்காணல் போன்ற தேவைகளுக்காக நகரங்களுக்கு இடம் பெயரும் அனைத்து மகளிரின் தேவைகளையும் கருத்தில் கொண்டு குறுகிய கால தங்கும் வசதியையும் பயன்படுத்திகொள்ளும் வகையில் இவ்விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, Wi-Fi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு வசதி, சுடு நீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பொழுதுபோக்கு அறை போன்ற வசதிகள் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில் தற்போது, தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறையில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 1649 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தரை மற்றும் முதல் தளம் கொண்ட புதிய கட்டடம் மற்றும் 592 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பூப்பந்து உள்விளையாட்டு அரங்கம் ஆகிய கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

குழந்தைகள் இல்ல கட்டடத்தில் சுமார் 100 சிறுவர்கள் தங்கும் வசதிகளுடன் அறைகள், மருத்துவ சிகிச்சை அறை, சமையல் அறை, உணவுக்கூடம், ஆற்றுப்படுத்துனர் அறை, பல்நோக்கு கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி சரண்யா அறி, மற்றும் தலைமை செயல் அலுவலர் பவன் கைபா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்காசி மாவட்டம் இ.சி.ஈஸ்வரன் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

## மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் அறிவிப்பு!

*தென்காசி, மார்ச் 6-*

*துணைமுதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டம் இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் (06.03.2026) இன்று நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க உள்ளார்கள்*

*இதில் 7127 பயனாளிகளுக்கு ரூபாய் 44.05 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,ரூபாய் 6.02 கோடி மதிப்பீட்டில் 32 முடிவற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், ரூபாய் 55.93 கோடி மதிப்பில் 185 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் துணை முதலமைச்சர் சிறப்பிக்க உள்ளார்கள்.என தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.*

*அதில் அவர் தெரிவித்திருப்பதாவது*

*இவ்விழாவில்,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,ஊரக வளர்ச்சித்துறை,ஒருங்கிணைந்த வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சமூக நலத்துறை, மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கூட்டுறவுத்துறை, முனனோடி வங்கி ஆகிய துறைகளில், 7127 பயனாளி களுக்கு ரூ.44.05 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள்.*

*மேலும், ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் 32 முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்தும்,ரூ.55.93 கோடி மதிப்பீட்டில் 185 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சிறப்பிக்கவுள்ளார்கள்.*

*இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.*




விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மரு. என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 100 பயனாளிகளுக்கு ரூ .3.50 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார் . உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம் சுந்தரவல்லி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி அமைப்பாளர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காவல்துறைக்கு ரூ.75.80 கோடியில் புதிய கட்டடங்கள் -

# 2,138 அடுக்குமாடி குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 75 கோடியே 80 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 200 காவலர் குடியிருப்பு கள், 2 காவல் நிலையங்கள், 8 காவல்துறை இதர கட்டடங்கள், ரூ.15 கோடி செலவில் 22 காவல் பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறைகளை திறந்து வைத்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2,138 அடுக்குமாடி குடியிருப்புகளை காவல்துறைக்கு வழங்கினார்.**

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல்துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், பாதுகாப்பு பணிகளுக்காக சுற்றுக்காவல் வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசின் இந்த ஐந்தாண்டுகளில் காவல்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 622.16 கோடி ரூபாய் செலவில் 3,597 காவலர் குடியிருப்புகள், 79.16 கோடி ரூபாய் செலவில் 58 காவல் நிலையக் கட்டடங்கள், 219.76 கோடி ரூபாய் செலவில் 37 காவல்துறை இதர கட்டடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் 55.19 கோடி ரூபாய் செலவில் 253 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**காவல்துறை சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தல்**

கோயம்புத்தூர் மாவட்டம் – சிங்காநல்லூரில் 31 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 100 காவலர் / தலைமைக் காவலர் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – பிரையண்ட் நகரில் 31 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 100 காவலர் / தலைமைக் காவலர் குடியிருப்புகள்;

காஞ்சிபுரம் மாவட்டம் - விஷ்ணு காஞ்சியில் 1 கோடியே 62 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் - சோழவரத்தில் 1 கோடியே 2 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செங்குன்றம் போக்குவரத்து காவல் நிலையம்;

சென்னை மாவட்டம் - கொண்டித்தோப்பில் 3 கோடியே 31 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர்களின் குழந்தைகளை கல்வி மற்றும் விளையாட்டில் வழிநடத்த உடற்பயிற்சிக்கூடம், நூலகம் மற்றும் கல்வி மையம்;

சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், மருதம் வளாகத்தில்

1 கோடியே 11 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் புதிய கட்டுப்பாட்டு அறைக் கட்டடம்;

சென்னை - தண்டையார் பேட்டை, மதுரை மாவட்டம் – மதுரை குதிரை இலாய வளாகம், சேலம் மாவட்டம் – லைன்மேடு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருச்சிராப்பள்ளி ஆயுதப்படை வளாகம் ஆகிய இடங்களில் தலா ஒரு கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் அங்காடிகள்;

திருவள்ளூர் மாவட்டம் - சோழவரத்தில் 1 கோடியே 11 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செங்குன்றம் காவல் உதவி ஆணையர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு; கரூரில் 1 கோடியே 09 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை கட்டடம்;

என மொத்தம் 75 கோடியே 80 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல்துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**காவல் பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறைகளை திறந்து வைத்தல்**

காவல்துறை பயிற்சியை நவீனமயமாக்குவதில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க முன்னெடுப்பாகவும், கற்றல் அமைப்பை மேம்படுத்த பல்வேறு கருவிகளை ஒருங்கிணைத்து இணையவழிக் குற்றங்கள், தடயவியல் அறிவியல், சட்ட நடைமுறைகள், மக்கள் கூட்டநெரிசல் கட்டுப்பாடு, போக்குவரத்து மேலாண்மை, பேரிடர் மீட்பு மற்றும் சமூக காவல் ஆகியவற்றை எளிதாக கையாள 1,24,000 காவலர்கள், மற்றும் காவல் அதிகாரிகளின் பயிற்சிக்கு பயன்படும் வகையில் 15 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், சென்னையில் 5 திறன்மிகு வகுப்பறைகளும், வேலூர், கோயம்புத்தூர், திருவள்ளூர், விழுப்புரம், திருச்சி, சேலம், மதுரை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகள் மற்றும் பணியிடை பயிற்சி மையம் ஆகியவற்றில் 17 திறன்மிகு வகுப்பறைகள் என மொத்தம் 22 திறன்மிகு வகுப்பறைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை காவல் துறையினரின் பயன்பாட்டிற்கு வழங்குதல்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு சென்னை - சோழிங்கநல்லூர், அம்பத்தூர் மற்றும் மகாகவி பாரதியார் நகர் ஆகிய இடங்களிலுள்ள 2,138 அடுக்குமாடி குடியிருப்புகளை காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக 5 காவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாடகை குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், காவல்துறை தலைமை இயக்குநர் பயிற்சி முனைவர் சந்தீப் ராய் ராத்தோர், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித் தேவ் வான்கேடே, சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சியில் Turip 2025 2026 திட்டத்தில் பல்வேறு வார்டுகளில் ரூ. 1.89 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியினை பார்வதிபுரம் ராஜபாதை மற்றும் தம்மத்துகோணம் பத்மா நகர் ஆகிய பகுதிகளில் மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர் பா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் சூ.அமல செல்வன், அ.ஆன்றோனைட் ஸ்னைடா, உதவி பொறியாளர் ராஜசீலி, பகுதி செயலாளர் மு.சேக்மீரான் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.